## ***இன்று பாஸ்காக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு.***

## ***இரண்டாவது திருவழிபாடு ஆண்டு***

## **2024-04-14**

*(இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்* 3: 13-15, 17-19,

*திருப்பாடல்* 4: 1. 6. 8,

*திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 2: 1-5 ,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 24: 35-48)

***திருப்பலி முன்னுரை***

"*உங்களுக்கு அமைதி உரித்தாகுக*" *இன்று பாஸ்காக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு.*

*அன்பிற்கினியவர்களே! இன்று இயேசுவின் உயிர்ப்பின் மையச் செய்தி 'அமைதி'. இயேசு இறந்துவிட்டார், எல்லாம் இழந்துவிட்டோம் என்ற ஏமாற்றத்தோடு வாழ்ந்த சீடர்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு தந்தது அமைதி. எல்லாவற்றையும் விட்டு விட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தோமே, இப்பொழுது தனிமையில் தத்தளிக்கின்றோமே என்று வருந்திய சீடர்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு தந்தது அமைதி. இயேசுவோடு மூன்று ஆண்டுகள் பயணித்து இயேசுவைப் பிரிந்து மூன்று நாட்களாக அச்சத்தோடு பயந்து நடுங்கி இனி நமக்கு என்ன நடக்குமோ என்று கதிகலங்கிய சீடர்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு தந்தது அமைதி.*

*ஆம் அன்பு சகோதரமே!*

*இதோ! இங்கு கூடியிருக்கின்ற நாமும் ஏதோ ஒருவித பயத்தோடும், நம்பிக்கையிழந்த அச்சத்தோடும் தினமும் போராடிக் கொண்டிருக்கின்றோம். இன்றைய திருவழிபாட்டின் வழியாக, அஞ்சாதீர்கள், உங்களுக்கு அமைதி உரித்தாகுக! என்ற மகிழ்ச்சி தரும் நற்செய்தியை இறைவன் நமக்கு தருகின்றார். நம் இயேசு, அச்சத்தை அகற்றி அமைதி தர வந்தவர். பயத்தைப் போக்கி பலத்தை தர வந்தவர். ஏமாற்றத்தைப் ஏணியாக மாற்றி ஏற்றம் தர வந்தவர். எதிர்பார்ப்புகளை எல்லாம் நிறைவேற்றி தர வந்தவர். அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் நம்முடன் நடந்திட துடிப்பவர். இயேசுவின் அமைதியை நம் வாழ்வினில் அனுபவிக்க இக்கல்வாரி பலியினில் நம் போராட்டங்களை, நாம் பயந்து பரிதவிக்கும் நிகழ்வுகளை, நம் வாழ்வினை குறித்த அச்சங்களை ஒப்புக்கொடுப்போம். இயேசுவின் நிலையான அமைதி நம்மை ஆட்கொள்ள ஜெபிப்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*இரக்கத்தின் இறைவா!*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் உம்பால் திருப்பொழிவு செய்யப்பட்டவர்கள் என்பதனை உணர்ந்து, தங்கள் முழு ஆற்றலோடு உமது பணியைச் செவ்வனே செய்ய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஆசீர்வதிக்கும் இறைவா!*

*நம் மூதாதையரான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு கடவுளைப் பெருமைப்படுத்தியது போல, நாமும் உம்மை வாழ்வில் ஏற்று, உம்மோடு இணைந்து, உமக்கு உண்மையுள்ளவர்களாக வாழ வேண்டிய அருளைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அமைதியின் இறைவா!*

*இன்றைய சமூகத்தில் சாதி, மதம், இனம், மொழி மற்றும் நிற வேறுபாடுகளைக் களைந்து, நீர் ஏற்படுத்திய அமைதியின் பாதையில் நாங்கள் வாழ வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மன்னிக்கும் இறைவா!*

*பாவ வாழ்க்கையினால் உம்மை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உமது ஒளியை வீசி பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்*

*அரவணைக்கும் இறைவா!*

*தங்களை இளம் வயதில் இறைப்பணிக்காக அர்ப்பணித்து, உமது பணியினை மேற்கொள்ளும் இறைப்பணியாளர்களின் முதிர்ந்த வயதில் தகுந்த பாதுகாப்பும். அன்பும், பராமரிப்பும், உடலுள்ள சுகமும் கிடைத்திட செய்ய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அமைதியின் தேவனே இறைவா!*

*இயேசு தம் சீடருக்கு வழங்கிய அதே அமைதியை நாங்கள் ஒவ்வொருவரும், மற்றும் உலக மக்கள் ஒவ்வொருவரும் பெற்று மகிழ்ந்திடவும் அனைத்துக் குடும்பங்களிலும் அமைதி, ஒற்றுமை வளர்ந்தோங்கிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*வழிநடத்தும் இறைவா!*

*இன்று திருஅவை கொண்டாடும் இறை இரக்கத்தின் நாளின் மேன்மையை உணர்ந்தவர்களாக பிறர்மீது இரக்கம் வைத்து, அன்பு செய்து, உதவிகள் செய்து வாழும் மக்களாக எங்களை வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*